**16.10.2025**

# பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலின நீதிக் கூட்டியக்கம் சார்பில் கரூர் பெருந்துயர சம்பவத்தின் உண்மை அறியும் குழு அறிக்கை!

தமிழக வெற்றிக் கழகம் மேற்கொண்டு வரும் பரப்புரையின் ஒரு பகுதியாகக் கரூரில் 27/09/2025 அன்று அதன் கட்சித் தலைவர் விஜய் அவர்கள் மேற்கொண்ட ”மக்கள் சந்திப்பு” நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் (18 பெண்கள் + 10 குழந்தைகள் + 13 ஆண்கள்) உயிரிழந்தது தமிழகத்தை உலுக்கியது. அதில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள், குழந்தைகள். அதிலும் கருவுற்ற பெண்களும் கூட இறந்தது அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது போன்ற இறப்பும் பாதிப்புகளும் இனிவரும் காலங்களில் நிகழா வண்ணம் தடுத்து விடும் நோக்குடன், இந்த நிகழ்வின் முழுப் பரிமாணத்தையும் அறிந்து கொள்ள, பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலின நீதிக் கூட்டியக்கம் சார்பில் 13 பேர் கொண்ட உண்மையறியும் குழு 09/10/2025 & 10/10/2025 இரண்டு நாட்கள் கரூர் சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்கள், பொதுமக்கள், தொழிலாளர்கள், காவல்துறை அலுவலர்கள் மற்றும் வழக்கறிஞர்களைச் சந்தித்து உண்மைகளைத் திரட்டி வந்துள்ளோம். அதனை அறிக்கையாக உங்கள் முன் அளிக்கிறோம்:


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | சிறப்பழுத்தம் | 2 – 5 |
| 2 | வேலுசாமிபுரம் குறிப்பு | 5 – 6 |
| 3 | பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகளின் தகவல்கள் | 6 - 18 |
| 4 | பொதுவானவர்களின் தகவல்கள் | 18 - 19 |
| 5 | காவல் அதிகாரிகளின் விளக்கங்கள் | 20 - 21 |
| 6 | குழுவின் பரிந்துரைகள் | 21 – 22 |
| 7 | குழு விவரம் | 22 - 22 |

சிறப்பழுத்தம்:

- கரூர் கொடுந்துயர் சம்பவத்திற்குக் காரணம் எவருடைய சதியோ, உள்நோக்கமோ இல்லை என்று இந்தக் குழு முழுமையாக நம்புகிறது.

- இந்தத் துயர நிகழ்விற்கு முதன்மைக் காரணம் தவெக தலைவர் விஜய் அவர்கள் மிக காலத் தாமதமாக வந்ததே. காலை 8.45 மணிக்கு நாமக்கலில் பரப்புரைத்தைத் தொடங்க வேண்டிய விஜய் அவர்கள் சென்னையிலிருந்தே 8.45க்குத்தான் கிளம்பியிருக்கிறார். இதுதான் அடுத்தடுத்த தாமதத்திற்குத் தொடக்கமாக இருந்துள்ளது. சென்னையிலேயே இத்தகைய கால தாமதம்த்திற்கான காரணம் என்ன என்பதை இன்று வரை விஜய் அவர்கள் விளக்கவில்லை. அதைத் தொடர்ந்து கரூர் வந்ததும் பெரிய காலத் தாமதத்துடன்தான் எனும் போது, விஜய் அவர்கள் சென்னையிலேயே ஏற்பட்ட தாமதத்திற்கான விளக்கத்தை மக்கள் மன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்று இந்தக் குழு வலியுறுத்துகிறது.

- விஜய் ரசிகர் கூட்டத்தைப் பெருமளவில் கூட்டி, கூட்டம் காட்டும் எண்ணத்தில், நாமக்கல்லிலிருந்து கரூர் வரும் வழிகளில், வேண்டுமென்றே பல இடங்களில் வண்டியை மெதுவாக இயக்கச் செய்திருப்பதாகத் தெரிகிறது. நாமக்கல்லில் இருந்து கரூர் பைபாஸ் அதிகபட்சம் ¾ மணி நேரத்தில் கடக்கக் கூடிய தொலைவைப் பல மணி நேரம் பயணித்து வந்துள்ளார். இது கரூர் கூட்ட நெரிசலுக்கு ஒரு முக்கியமான காரணம்.

- திசம்பர் மாதம் நடக்கவிருந்த தவெக பரப்புரைக் கூட்டமானது, குறைந்த கால அவகாசத்தில் 27/09/2025 அன்றே, திமுகவின் முப்பெரும் விழாவை விட அதிகமான கூட்டம் கூட்டி நடத்தி விட வேண்டும் என்ற அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்பட்டிருப்பதை யாம் உறுதி செய்கிறோம்.

- விஜய் பரப்புரை நிகழ்வு நடத்தத் திட்டமிட்டிருந்த இடத்திற்கு 50 மீட்டருக்கு முன்னரே காவல்துறை வழிகாட்டியபடி வாகனத்தை நிறுத்திப் பேசியிருந்தால் நெரிசல் நெருக்கடி ஏற்படும் வாய்ப்புகளைத் தவிர்த்திருக்க முடியும்.

- விஜய்யுடன் இருந்த பாதுகாவலர் ஒருவர் crowd burst என்று எச்சரித்தும் விஜய் அதனை அலட்சியப்படுத்தித் தன் பேச்சை தொடர்ந்தது, மக்கள் நலன் மீது அவருக்கு இருந்த அக்கறையின்மையையும் பொறுப்பின்மையையும் காட்டுகிறது.

- விஜய் கூட்டங்கள் நடக்கும் இடங்களிலும் அவர் ஏர்போர்ட் வந்து போகும் இடங்களிலும் தொடர்ந்து ஏறக்குறைய 2,000 பேர் கொண்ட குழு பின்தொடர்கிறது என்று கவனிக்கப்பட்டுள்ளது. இவர்கள் யார்? இவர்கள் இப்படிப் பின்தொடர தவெக -ஆல் ஏற்பாடு செய்யப்பட்டவர்களா? என விசாரணை மேற்கொள்ள வேண்டும் என இக்குழு கேட்டுக்கொள்கிறது.

- விஜய் வண்டி கூட்டத்திற்குள் வந்த பிறகு 20 பேர் கொண்ட ஒரு குழு கூட்டத்தை ஒரு மஞ்சள் வண்ணக் கயிறு கொண்டு உள்நோக்கித் தள்ளியதாகக் கூறப்படுகிறது. அவர்கள் யார்? என்ற உண்மை கண்டறியப்பட வேண்டும்.

- இரண்டு நாட்களாகவே (25/09/2025 & 26/09/202) சம்பவ இடத்தில் தவெக துண்டுகள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அதைப் போவதும் வருவதுமாக இரண்டு நாட்களும் மக்கள் பார்த்த வண்ணம் இருந்திருந்திருக்கிறார்கள். அதேபோல் 27/09/2025 அன்றும் காலையிலிருந்தே விஜய் என்னும் நடிகரைப் பார்க்கும் ஆர்வத்தில் மக்கள் திருவிழாக் கொண்டாட்டமாக இருந்திருக்கிறார்கள்

- மதிய நேரங்களிலே மேளம், ஆட்டம் பாட்டம் என மக்கள் கூட்டம் இருந்த 27/09/2025 அன்று காலையிலிருந்து மாலை வரை மக்கள் கூடியிருந்திருக்கிறார்கள். தவெக தலைவர் விஜய்யின் பரப்புரை வண்டி சம்பவ

இடத்திற்கு வரும் போதுதான் காவல்துறையினரும் வந்துள்ளனர். கரூரில் வாகனம் நிறுத்துவதற்கான வசதியுள்ள இடமாகக் கருதப்பட்ட வேலுசாமிபுரத்தில், ஒவ்வொரு சந்துக்குள்ளும் ஆயிரக்கணக்கான இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்படுவதைக் காவல்துறை தடுக்கத் தவறிவிட்டது. நெரிபட்டு மூச்சுத் திணறி, தப்பிக்க சந்துக்களுக்குள் நுழைந்த மக்கள் இருசக்கர வாகனங்களால் நிலைதடுமாறி விட்டனர்.

❖ பெண்கள்... குழந்தைகள் பாதுகாப்புக் கருதி, பரப்புரை வண்டி நின்றதற்கு வலதுபுறம் இடம்பிடித்து நின்றிருந்துள்ளார்கள். வண்டி நின்ற இடத்திலிருந்த மக்கள், குறிப்பாகப் பெண்கள்... குழந்தைகள் இருந்த இடத்திற்கு நகரவே, அங்கு கட்டுக்கடங்கா நெரிசல் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பகுதி இந்த இடத்தில் நின்றவர்கள் என்பதை மறந்து விட வேண்டாம். பெண்கள் குழந்தைகள் பெருமளவில் இறந்ததற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால், கூட்டம் நசுங்கி நொறுங்கியது என்று சொன்னால் மிகையன்று. அப்படி ஒரு சூழ்நிலையில் இளைஞர்கள் உட்பட கட்டுப்பாட்டை இழந்து, ஆண்களும் பெருமளவில் இறந்துள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது. பெண்கள் என்பதால் இறக்கவில்லை, கட்டுப்பாட்டை இழந்த கூட்ட நெரிசல் என்பதால் 41 பேர் இறந்துள்ளார்கள் என்றுதான் சொல்ல முடியும்.

❖ பொதுவாக அரசியல் கட்சிகள் கூட்டம் நடத்தும் போது ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு பொறுப்பாளர், அவர் அந்தக் குழுவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பார்த்துக் கொள்வார். அதுவும் கூட அந்தக் குறிப்பிட்ட கட்சியின் குறிப்பிட்ட நிர்வாகம் எத்தனைப் பேர் ஒரு கூட்டத்திற்கு வருவார்கள் என எண்ணிக்கையைக் கணிக்க முடிந்திருக்கிறது. அது போன்ற எந்த ஏற்பாடும் தவெக சார்பில் இந்த நிகழ்வில் செய்யப்படவில்லை என்பது கூட்ட எண்ணிக்கையைக் கணிக்க முடியாமைக்கான முக்கியமான காரணம்.

- பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள், தலித் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டிருக்கிறார்கள். பெண்கள், குழந்தைகள் அதிகமாகக் கூடியிருக்கிறார்கள்.

- அந்த நாள் சனிக்கிழமை என்பதாலும், வார சம்பளம் வாங்குகின்ற நாளாக இருந்ததாலும், அன்று மாலை 5 மணிக்கு மேல் வேலை முடிகிற நேரம் என்பதாலும், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறைக் காலம் என்பதாலும், அந்த நேரத்தில் கூட்டம் அதிகரித்து இருக்கிறது. விடுமுறைக் காலம் என்பதால் கூட்டம் பெருமளவில் கூடும் என்பதை உளவுத் துறை கணித்துக் கூறியதா? காவல் துறை அந்தக் கணிப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்ததா? என்ற கேள்வி எழுகிறது. உள்ளூர் மக்கள் மட்டுமின்றி வெளி மாவட்டங்களில் இருந்தும் மக்கள் கூடியதால் நெரிசல் ஏற்பட்டது. கூட்டம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகக் கால தாமதமாகவே கூட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, அதுவே நெரிசலுக்கும் உயிரிழப்புக்கும் காரணமாகும்.

- ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் சமூக அக்கறை இல்லாமல் தொடர்ந்து விஜய்யை பிம்பப்படுத்தி பரப்புரை நிகழ்விற்கு வரும்படியான ஆசையைத் தூண்டி, உணர்ச்சியைத் தூணடும் விதமாக, அழைப்பு விடுத்திருக்கிறார்கள். தவெக நிர்வாகிகளும், பொறுப்பாளர்களும் எவ்விதப் பொறுப்புணர்வும், மக்கள் மீது எவ்வித அக்கறையும் இல்லாதவர்களாக நடத்தியுள்ளனர். ரசிகர் கூட்டத்தைக் காட்டிக் கட்சி நடத்தி விடலாம் என்ற எண்ணத்தில் உள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

வேலுசாமிபுரம், கரூர் இடம் பற்றிய குறிப்பு:

கரூரில் 27/09/2025 அன்று தமிழக வெற்றிக் கழகம் நடத்திய 'மக்கள் சந்திப்பு' நிகழ்வு நடந்த இடம் வேலுசாமிபுரம். இது பெரும்பாலும் விளிம்புநிலை மக்கள், சாமானிய மக்கள் வாழக் கூடிய இடம். இந்தப் பகுதி இடது வலது பக்கங்களில் நிறையக் கிளைச் சந்துகள் கொண்டது. இது கரூர் ரவுண்டானாவிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில்

ஈரோடு கரூர் சாலையில் உள்ளது. நிகழ்வு நடந்த இடத்திலிருந்து அருகில் (200 அல்லது 300 மீட்டரில்) ஒரு பெட்ரோல் பங்க் உள்ளது. இடத்திற்கு நேரடியாகக் குழு சென்றது. அங்கு சேதாரம் அடைந்த Asbestos sheet அதே நிலையில் இருந்ததைக் கண்டோம். மேலும் கிளை உடைந்த மரத்தையும், உடைந்த கால்வாய் மூடியையும் கண்டோம். கடைகள் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால் இந்தத் துயர நிகழ்வின் சாயல் அந்த இடத்தை அப்பிக் கொண்டிருந்தது.

**09/10/2025 & 10/10/2025 ஆகிய இரு நாள்களில் கரூரில் பாதிப்புற்றவர்கள் உள்ளிட்ட பலரையும் நேரில் கண்டு நாங்கள் திரட்டிய தகவல்கள்:**

I. **1. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த உடன்பிறந்த பழனியம்மாள் (வ: 11) மற்றும்**

**2. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த உடன்பிறந்த கோகிலா (வ: 7) ஆகியோரின் பெற்றோர் எங்கள் குழுவிடம் கூறியது:**

"எங்களுக்கு மூன்று பெண் குழந்தைகள், கடைசியாக ஒரு ஆண் பிள்ளை. இரண்டாவது பெண் பழனியம்மாள், மூன்றாவது பெண் கோகிலா."

"இரண்டு நாட்களாகவே இந்த ஏரியாவில் தவெக மஃப்ளர் 2 'லோடு' கொண்டுவந்து விற்கப்பட்டது. அதுவே சரியான விற்பனைதான். என் மகன் வாங்கித் தந்தே ஆகணும் என வாங்கினான். சம்பவத்தன்று காலையிலிருந்தே நிறைய பேர் வந்தார்கள். அப்போதெல்லாம், அங்கே தண்ணீரோ காவல்துறையோ இல்லை.

"பழனியம்மாள், கோகிலா இருவரும் அம்மா, அக்கா மற்றும் தம்பியுடன் சென்றனர்.

"எங்கள் வீடு தவெக பரப்புரை நடந்த இடத்திற்குப் பின்புற வீதியில் உள்ளது. நான்கு குழந்தைகளுமே விஜய் ரசிகர்கள். அப்பா "பெரும் கூட்டம் வரும், நீங்கள் போகக் கூடாது" என எச்சரித்து விட்டு வேலைக்குச் சென்று விட்டார்." ஆனால் அப்பா (ஓட்டுநர்) வேலைக்குச் சென்ற பிறகு பிள்ளைகள் அம்மாவின் காலில் விழுந்து கெஞ்சி தங்களை

அங்கு அழைத்துச் செல்ல கேட்டதால், ஒரு கட்டத்திற்கு மேல் குழந்தைகளை சமாளிக்க முடியாமல், தாய் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பரப்புரை நடக்கும் இடத்திற்கு தன் தெருவில் உள்ள இன்னொரு குடும்பத்துடன் சேர்ந்து செல்கிறார்."

"விஜயின் நாமக்கல் பரப்புரை முடிந்து வரத் தாமதமானதால், மாலை 3 மணிக்கு விஜய் வருவதாகத் தகவல் வருகிறது. அதனால் அம்மா குழந்தைகளுடன் செல்வதால் தண்ணீர் எல்லாம் எடுத்துக் கொண்டு மாலை 4.30க்கு அங்கு செல்கிறார்கள். ஆரம்பத்தில் பிள்ளைகள் பாட்டுப் போட்டு நடனமெல்லாம் ஆடிக் கொண்டிருந்தார்கள். அங்கு தண்ணீர் எல்லாம் கொடுக்கவில்லை. அங்கு எங்கேயும் நாங்கள் காவல்துறையைப் பார்க்கவில்லை. விஜய் வந்த வண்டி ரவுண்டானாவில் டிராஃபிக்கில் மாட்டிக் கொண்டது. அதனால் தான் அவர் வரத் தாமதம் ஆனது.

"கூட்டத்தில் பெரும்பாலார் இளைஞர்கள்தான். அவர்கள் தாங்களாகத்தான் விஜயைப் பார்க்க வேண்டும் என வந்திருந்தார்கள். ஆர்வக் கோளாறால் வந்திருந்தார்கள். திண்டுக்கல், நாமக்கல், என பல வெளியூர்களில் இருந்தும் வந்திருந்தார்கள், வெளியூர் மக்கள் இடம் பிடிக்க முன்னதாகவே வந்திருந்தார்கள்.

"விஜய் வண்டி 7 மணிக்கு மேல்தான் வந்தது, வந்த பிறகுதான் பெரிய கும்பல் சேர்ந்து நெரிசல் ஆனது. கூட்டம் கிழக்கிலிருந்து மேற்காகப் பின்னால் தள்ளத் தொடங்கினர். நாங்கள் நடுவில் மாட்டிக் கொண்டோம். அங்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. அவர்கள் நின்ற இடத்திற்கு மேலிருந்த கூரையின் (Asbestos sheet) மேல் திடீரென 20, 30 பேர் ஏறி, அந்தக் கூரை இவர்கள் மேல் விழுகிறது."

"அம்மாவும் பிள்ளைகளும் மயக்கம் அடைகிறார்கள். எல்லாம் ஒரு கால் மணி நேரம்தான். முடிந்து விட்டது."

"எங்களுக்கு இந்தப் பரப்புரைக்குச் சென்றதில் அரசியல் ஆர்வமெல்லாம் கிடையாது. ரசிகர்களாகச் சென்றோம். எங்கள் பகுதியில் விஜய்க்கு ரசிகர் மன்றமெல்லாம் கிடையாது.

"கூட்டம் நடத்தத் தகுந்த இடம் கொடுத்திருக்க வேண்டும். இந்த இடம் தகுந்த இடமில்லை. விஜயை இதற்காகக் கூட்டமே நடத்தக் கூடாது எனச் சொல்ல முடியாது. நாலு ரோட்டில் நடத்தி இருக்கலாம், அங்கு உள்ள பெட்ரோல் பங்கால் ஆபத்து என்றால், ஆம் சரிதான். காவல்துறை விஜய்க்கு 3 மணி முதல் 10 மணி வரை தான் அனுமதி கொடுத்தார்கள். விஜய் தனக்கான கூட்டத்தை காட்டத்தானே செய்வார்? மாவட்ட நிர்வாகம்தான் இதற்கு பொறுப்பு.

"கரூர் கோயில் திருவிழாவில் ஊர் திரளும், காவல்துறைப் பாதுகாப்பும் இருக்கும், ஆனால் இப்படி நடந்ததில்லை.

"எடப்பாடி பழனிச்சாமி இதே இடத்தில் பரப்புரை செய்தார், 10,000 பேர் திரண்டார்கள், ஆனால் ஆங்காங்கே LED TV வைக்கப்பட்டிருந்தது. அதனால் யாரும் நெரிக்கவில்லை."

"அண்மையில் விஜய் தொலைபேசியில் அழைத்துப் பேசினார். கண்ணீர் விட்டு அழுதார்."

[இவர்கள் வீட்டிலிருந்து நாங்கள் வெளியில் வந்து போது பக்கத்து வீட்டு அம்மா ஒருவர் சொன்னார், "நானெல்லாம் 300 அடி தள்ளித்தான் நின்றேன்" என்று.]

### II. 3. கட்டுக்கடங்காத கூட்ட நெரிசலில் உயிரிழந்த குருவிஷ்ணு (வயது: 1¾) தந்தை மற்றும் மாமா எங்கள் குழுவிடம் கூறியது:

அப்பா கூறியது: "குழந்தையின் தாய் காது கேட்காத, வாய் பேச முடியாத பெண். என் மனைவியின் நிலை கருதி என் அக்கா என் குழந்தையை எங்கு சென்றாலும் அழைத்துச் செல்லும் பழக்கம் உள்ளவர். எங்கள் வீடு சம்பவம் நடந்த இடத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒரு சந்துதான், ஏறக்குறைய பின்புறம் என்று சொல்லலாம். விஜய் கட்சியினர் தண்ணீர், கோசா பழமெல்லாம் கொடுத்தார்கள். நான் வேலைக்குச் சென்றிருந்தேன். நான் மாலை 5.40க்கெல்லாம் விஜய்யைப் பார்க்க வேலை செய்யும் இடத்தில் அனுமதி வாங்கிக் கொண்டு பைபாஸ் வந்தேன். அப்போது விஜய் வண்டியின் மேல் ஏறி மக்களுக்கு கைகாட்டிக் கொண்டு வந்தார்.

“அண்மையில் எங்களிடம் விஜய் வீடியோ கால் பேசினார். 'நான் குழந்தைகளை கூட்டிட்டு வர வேண்டாம் என சொன்னேனே' என்றார், அழுதார்.”

மாமா கூறியது: “நான் 15 வயதில் விஜயுடன் நிழற்படம் எடுத்துள்ளேன். இந்த வயதில் மறுபடியும் அவரை பார்க்கும் ஆர்வம் இருந்தது. என் மனைவி, நான், என் இரு குழந்தைகள் மற்றும் இறந்த குழந்தை எல்லோரும் விஜய்யைப் பார்க்கத்தான் கூட்டத்திற்கு அங்கு சென்றிருந்தோம். அங்கு போகும் போது பெரிய கூட்டமில்லை. அங்கு கல்லூரி மாணவர்கள், கருவுற்ற பெண்கள், குழந்தைகள் எல்லாம் இருந்தாங்க. நிறைய 30-35 வயதுள்ளவர்களாக இருப்பார்கள். நிறையப் பேர் வெளியூர்களில் இருந்தும் வந்திருந்தார்கள். மின்சாரம் இல்லாததால், விஜய் பேசுவது கேட்காமல்தான் கூட்டம் நெருக்கியடித்துப் பின்னாலிருந்து தள்ளிக் கொண்டு வரத் தொடங்கியது. அதனால்தான் நெருக்கடி. நெருக்கடியில் குழந்தையுடன் என் மனைவி கீழே விழும் போது அங்கிருந்த ஒரு அம்மா இவர்களுக்கு உதவுவதற்காகக் குழந்தையைக் கையில் வாங்கி இருக்காங்க. என் மனைவி மீது ஒரு 20 பேர் இருந்தார்கள். அவருக்கும் கடுமையான காயங்கள், என் மகளுக்கும் கண்ணுக்குக் கீழ் அடிபட்டு, infection ஆகி இருக்கு. நாங்கள் அரசியலாகச் செல்லவில்லை, ரசிகர்களாக விஜய்யைப் பார்க்கத்தான் சென்றோம். நெருக்கடிக்குக் காரணம்: இடம் குறுகலான இடம், இவ்வளவு பேர் இங்கு நிற்க முடியாது. இவை திட்டமிட்டு நடந்தவை அல்ல. இந்த இடத்தில் குதிரைப் பந்தயம் எல்லாம் கூட நடக்கும்.”

[இங்கேயும் ஊர் மக்கள் குழுவை சந்திக்கும் போது “எங்கெங்க தண்ணீர் கொடுத்தாங்க? நாங்கதான் தெருக்களுக்குள் வந்தவர்களுக்கு தண்ணீர் கொடுத்தோம்” என்றார்கள்.]

### III. 4. கட்டுக்கடங்காத கூட்ட நெரிசலில் உயிரிழந்த ரித்திக் (வ/8)... அவரின் பெற்றோர் எங்கள் குழுவிடம் கூறியது:

அம்மா: ”எங்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள். மூத்தவன் இறந்த ரித்திக். அம்மா BA தமிழ் இலக்கியம் படிச்சிருக்காங்க, அப்பா வெல்டிங் வேலை செய்கிறார். இறந்து போன எங்களது மகன் ரித்திக் விஜயை மாமானுதான் கூப்பிடுவான், அவன் விருப்பப்படிதான் விஜய்யின் பரப்புரைக்கு, அவர் மதியம் வருவதாகச் சொன்னதால், நான் இரண்டு

குழந்தைகளையும் அழைத்துச் சென்றேன். இவர்களுடன் இவர்களின் உறவுக்காரர்களும் மதியம் 1.00 மணிக்குச் சாப்பாடு, தண்ணீர் எடுத்துச் சென்றார்கள். அங்கு நிறைய பெண்கள், குழந்தைகள் இருந்தார்கள். அங்கு தவெக சார்பில் தண்ணீர் கொடுத்தார்கள். ஏழு மணிக்குதான் நெரிசல் தொடங்கியது, சிறிது நேரத்தில் மூச்சுத்திணற ஆரம்பித்து விட்டது. அந்த நேரம் என் இளைய மகன் தூங்கி விட்டான், அவன் உறவுக்காரர்கள் கையில் இருந்தான். பெரிய மகன் ரித்திக் கூட்டத்தில் இழுத்துச் செல்லப்பட்டான். அவனைப் பிடிக்க அவன் கால்களை நான் பிடிக்க நானும் கீழே விழுந்து, கூட்டத்தில் இழுத்து செல்லப்பட்டு, மயங்கி விட்டேன். இதன் பிறகு நடந்தவை எதுவும் எனக்குத் தெரியாது. என்னையும் அவசர ஊர்தியில் ஏற்றிச் சென்று ICU பிரிவில் சேர்த்து விட்டார்கள். கணவருக்கு அவர் வேலையில் இருக்கும் போது emergency செய்தி 8 - 8.30க்குள் தெரியப்படுத்தப்பட்டது. எனக்கு பலத்த அடி. இன்று வரை மருத்துவம் எடுத்து வருகிறேன்."

அப்பா: "இந்த இடம் பொருத்தமான இடமில்லை. மக்கள் குழந்தைகளை அழைத்துச் சென்றிருக்க கூடாது. அண்மையில் விஜய் வீடியோ கால் செய்து பேசினார், அழுதார்."

அம்மா பட்டதாரி, அவர் பட்டம் முடித்திருக்கிறார். அவருக்குத் தகுந்த அரசு வேலை வழங்க வேண்டும்.

கொடிய கூட்ட நெரிசலில் உயிரிழந்த ஜெயா (வ/57) அவரின் மகன் மற்றும் அவரின் தங்கை எங்கள் குழுவிடம் கூறியது:

"நான் முருகன். தவெக-இல் வார்டு 8 செயலாளராக உள்ளேன். நான் ஒரு கூலித் தொழிலாளி, தவெக ஊர்க் குழந்தைகளுக்கு முட்டை வழங்கும் திட்டம் வெளியிட்ட போது, நான் என் வருமானத்தில், என் அம்மா ஜெயா முட்டை வேக வைத்துக் கொடுக்க அதைத்தான் நான் ஊர்க் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தேன். நான் விஜய் கட்சி தொடங்கும் வரை அதிமுக-இல் இருந்தேன். அதனூடே நான் விஜய் ரசிகர் மன்றத்திலும் இருந்தேன். விஜய் கட்சி தொடங்கும் போது ரசிகர் மன்றங்களைக் கட்சிக் கிளைகளாக மாற்றினார். அதனால் நான் அதிமுக-இல் இருந்து வெளியேறி தவெக-இல் பொறுப்பு ஏற்றேன்.

“என் அப்பா இல்லை. இன்று என் அம்மாவிற்குக் கருமாதி நிகழ்வு, அதனால்தான் சொந்தக்காரர்கள் இங்கு இருக்கிறார்கள். நான் என் தாய் ஜெயாவையும், சித்தியையும் அழைத்துச் சென்றேன். தவெக மற்றும் காவல்துறை மதியம் 3 மணிக்கு விஜய் வருவதாக அறிவித்துக் கொண்டே இருந்தார்கள். குழந்தைகளை விடப் பெண்கள்தான் அதிகம். அதனால்தான் மதியம் 1 மணிக்கே சென்று இடம் பிடித்து அம்மாவையும் சித்தியையும் பாதுகாப்பாக உக்கார வைத்து விட்டேன். அங்கு தண்ணீர் எல்லாம் கொடுத்தார்கள்.

“தவெக யாரையும் அழைத்து வர உத்தரவிடவில்லை, நான் அழைத்துச் செல்லவும் இல்லை. பரப்புரை வண்டி முனியப்பன் கோயில் நெருங்க நெருங்க விஜய் வண்டியின் உள்ளே சென்று விட்டார். விஜய் வண்டி கூட்டத்திற்குள் வர வர மக்கள் வண்டியை நோக்கி வர தொடங்கி விட்டார்கள். வண்டியைச் சுற்றி 20 அடியில்தான் எல்லா சம்பவமும் நடந்திருக்கிறது, ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு கூட்டம் நெரிசலைச் சந்திக்கிறது. ஜெனரேட்டர் கிட்ட நிறைய மக்கள் காயமடைகிறார்கள். மின்சாரம் இல்லாததால் இருட்டில் யாரை மிதிக்கிறோம், எதை மிதிக்கிறோம் என எதுவும் தெரியவில்லை. என் மேல் ஏறி மிதித்துச் செல்கிறார்கள். நான் பெரும் காயமுற்றேன். விஜய் பேசினாரா என்றே எனக்கு தெரியாது. நான் சாக்கடைக்குள் விழுந்து என் சட்டையெல்லாம் சாக்கடை. சித்தியும் அம்மாவும் ஒன்றாகத்தான் இருந்திருக்கிறார்கள். கூட்ட நெரிசல் இருவரையும் பிரித்துத் தனித்தனியே தள்ளிவிட்டது.”

அங்கு ஜெயாவின் வீட்டில் சொந்தக்காரர்கள் நிறைய பேர் இருந்தார்கள். பேசும் அளவிற்கு முருகனுக்கு உடல்நலம் இல்லை என்று ஒரு பெண் சத்தம் போட்டார். அவரைப் பேச வேண்டாம் என மருத்துவர்கள் சொல்லி இருக்கிறார்கள் என்றார். ”அவரை இந்தக் கருமாதிக்காகத்தான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்து அழைத்து வந்திருக்கிறோம்” எனக் கொஞ்சம் கடுமையாகச் சொன்னார்.

அதன் பின் முருகனின் சித்தி கூறியது: “நாங்கள் ஒன்றாகத்தான் இருந்தோம், கூட்ட நெரிசல் இருவரையும் பிரித்து விட்டது, நான் ஒரு சந்துக்குள் தள்ளப்பட்டு, அங்கேயே காத்திருந்தேன். நான் உடனே முருகனைக் கைபேசியில் அழைத்து அக்காவை விட்டுப் பிரிந்து நிற்பதைத் தெரிவித்து விட்டேன். முருகன் காலெல்லாம் அடி, நடக்க முடியாத

நிலை, ஆனால் அம்மாவைக் காணோம் என்ற நிலையில் கடுமையான வலியுடன் நடந்து தேடிக் கொண்டே இருந்தான். ஜெயாவின் பை ஒரு பக்கம் கிடைத்து விட்டது. எங்கு தேடியும் கிடைக்காததால், தேடிக் கொண்டு அமராவதி மருத்துவமனை சென்றோம், அடுத்துக் கரூர் அரசு மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கு சென்று தேடும் போதே முருகன் மருத்துவமனையிலேயே மயங்கி விழுந்து சுயநினைவை இழக்கிறான். அவனை ICUவில் வைத்து விடுகிறார்கள். இதன் பிறகு நான்தான் இரவு 9 மணியளவில் ஜெயாவைப் பிணவறையில் பார்த்தேன்."

"இதற்கெல்லாம் காரணம் மக்களின் ஆர்வம், கூட்டம் நடத்த இடம் சரியானது இல்லை. ஊருக்கு வெளியில பெரிய இடமாகக் கொடுத்திருக்கலாம்."

சித்தியின் பையன்: "தவெக உதவுவதாகச் சொன்னாலும், அவர்கள் பெரிய அளவில் முருகன் மருத்துவத்திற்கு உதவவில்லை. அதனால் திமுகவிற்குத் தகவல் கொடுத்து அவர்கள்தான் உதவி செய்தார்கள். கரூர் அரசு மருத்துவமனையில் இதற்கு மேல் அவருக்கு சிகிச்சை அளிக்க முடியாது என மதுரை மருத்துவமனைக்கு அவசர ஊர்தி மூலம் அழைத்துச் சென்றோம். அங்கிருந்து இந்தக் கருமாதிக்காக டிஸ்சார்ஜ் செய்து அழைத்து வந்தோம்."

### IV. 5. கட்டுக்கடங்காத கூட்ட நெரிசலில் உயிரிழந்த ரவி கிருஷ்ணன் (வ/29) அவரின் அம்மா மற்றும் அவரின் நண்பர் போத்தீஸ் எங்கள் குழுவிடம் கூறியது:

அம்மா: "நான் டெங்கு ஒழிப்புத் தற்காலிகத் தொழிலாளர். ரவி திருச்சி கல்லூரியில் பி.டெக் முடித்து, இப்போதுதான் தனியாகக் கட்டுமான வேலைகளில் ஈடுபட்டு வந்தார். 3 வயதிலிருந்தே என் மகன் விஜயின் தீவிர ரசிகர். விஜய் மாநாடுகளின் போது கூட ரவி தன் வேலைகளுக்குச் செல்லாமல், அவர் பேசட்டும், கேட்டு விட்டுச் செல்கிறேன் என்பான். கரூரில் விஜய் கூட்டம் எங்கு என்று முடிவு செய்யப்படாமலே இருந்து, வடிவேல் நகரில் என்ற அறிவிப்பு வந்தவுடனே, நம் பகுதியில் கூட்டம் நடக்கப் போகிறது என மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தான். ரவி காதலித்த பெண்ணுடன் இப்போதுதான் நிச்சயம் செய்யப்பட்டது. ரவி, நான், என் மகள், என் மருமகன் மற்றும் என் பேரக் குழந்தை அனைவரும் மாலை 4 மணிக்குச் சென்றோம், ரவியும் ரவியின் 5 நண்பர்களும்

ஒன்றாகத்தான் உள்ளே சென்றார்கள். அந்த நேரம் கூட்டமெல்லாம் இல்லை. அங்கு குச்சி ஊன்றிக் கொண்டு வந்த ஒரு அம்மாவைக் கூட நான் பார்த்தேன். ரவி எங்களை எல்லாம் அட்சயா மருத்துவமனை அருகில் நிற்க வைத்திருந்தார். விஜய் வண்டி ரவுண்டானா அருகில் வரும் போதே சம்பவ இடத்தில் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. ரவி எங்களிடம் வந்து கூட்டம் ஆபத்தாக உள்ளது என்றும், அதனால், எச்சரிக்கையாக இருக்கும் படியும் சொல்லி ரவி எங்களை ஒரு ஏடிஎம்-க்குள் நிறுத்தி விட்டுச் செல்கிறார். வண்டி நெருங்க நெருங்க மறுபடியும் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள எண்ணி எங்களிடம் வருகிறார். ஆனால் அனைவரும் வெளியில் நிற்பதைப் பார்த்து விட்டு, கடுமையாகப் பல்லைக் கடித்துக் கொண்டு கோபமாக உள்ளே போகச் சொல்கிறார். இவ்வளவு தூரம் வந்து விட்டோம், விஜய்யைப் பார்த்து விட வேண்டுமென்ற எண்ணம். ஆனால் ரவி மிகுந்த கோபத்துடன் எச்சரித்ததால், நான் குழந்தையை மட்டும் தூக்கிக் கொண்டு ஏடிஎம்-க்குள் செல்கிறேன். வண்டி சம்பவ இடத்திற்குள் சென்றவுடன் அட்சயா மருத்துவமனையில் முதலில் ஒரு 1½ வயதுக் குழந்தையை மயங்கிய நிலையில் கொண்டுவந்து போடுகிறார்கள். அதன் பின் நிறைய குழந்தைகளைக் கொண்டுவந்து போடுகிறார்கள், கொஞ்ச நேரத்தில் ஒரு இளைஞரைக் கொண்டுவந்து போடும் போதுதான் எனக்கு ரவி குறித்த அச்சம் வருகிறது. போலீஸ் ஒரு பையனுக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். போன் செய்து பார்த்தோம், ஆனால் யாருக்கும் போன் போகவே இல்லை. அதன் பிறகு நான் ரவியின் நண்பர்களுக்கு அழைத்தேன், அவர்கள் நாங்கள் அழைத்து வருகிறோம் என்று எங்களை வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். ரவியின் போன் மட்டும் ஒருவர் எடுத்து வைத்துத் தந்திருக்கிறார். கூட்டத்தில் கிடைக்கவில்லை என்றதும் ரவி நண்பர்கள் மருத்துவமனை சென்று தேடுகிறார்கள், பிறகு ரவி அம்மாவிற்கு அவரது நண்பர்கள் அழைத்து அவர் மூச்சு திணறலால் இறந்து விட்டதாகச் சொல்கிறார்கள். ரவியின் சட்டை முழுவதும் செருப்புக் காலடிச் சுவடுகள் இருந்தன.

"ஒவ்வொரு சந்துக்குள்ளும் 1,000 இருசக்கர வண்டிகள். இது பொருத்தமில்லாத இடம். போலீஸ் பாதுகாப்பு இல்லை. இதில் பெற்றோர்களுக்கும் அரசுக்கும் பொறுப்பு உள்ளது.

"விஜய் வீடியோ காலில் பேசினார். அனுமதி கிடைத்ததும் நேரில் வருவதாகச் சொன்னார்."

ரவியின் நண்பர், அவருடன் விஜய் கூட்டத்திற்கு சென்ற 5 பேரில் ஒருவர், போத்தீஸ்: “காலையிலிருந்தே விஜய் கூட்டம் நடந்த இடம் கொண்டாட்டமாகத்தான் இருந்தது. மாலை வரை அங்கு குடிதண்ணீர் கொடுக்கப்பட்டது. விஜய் 3 மணிக்கு வருவார்னு தகவல் தரப்பட்டது. ரவியுடன் சேர்ந்து நாங்கள் 5 பேரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டுதான் உள்ளே சென்றோம். விஜய் தன் வண்டியின் மேல் நின்று கையசைத்தபடி சக்தி மில்ஸ் வரை வந்தார். ஆனால் வண்டி உள்ளே வரும் போது கூட்ட நெரிசலில் நாங்கள் ஒருவர் கையை ஒருவர் விட்டு விட்டோம். விஜய் வண்டி வரும் போது நாமக்கலில் இருந்து நிறைய பேர் வந்தார்கள். வண்டியின் 20 அடிக்குள்தான் பெரும் நெருக்கடி. நான் கீழே விழுந்து என் மேல பல பேர் நடந்தார்கள். இடையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அங்கு தவெக சார்பில் ஜெனரேட்டர் இருந்ததால், மின்சாரம் நின்றதும், அது தன்னிச்சையாக இணையும் வரைதான் அங்கு வெளிச்சம் இல்லை. கூட்டம் நடந்த இடத்தில் காவல்துறை இல்லை, பாதுகாப்பும் இல்லை. விஜய் பவுன்சர்கள்தான் 10 பேர் இருந்தார்கள். அளவுக்கு அதிகமான கூட்டம் இருந்தது. கூட்டம் நடந்த இடத்திலிருந்து 600 மீட்டரில் அட்சயா மருத்துவமனை இருக்கு, அதன் அருகில் எந்தச் சீருடையும் இல்லாத 20 பேர் மஞ்சள் நிறத் தடிமனான கயிறு கொண்டு கூட்டத்தை உள்ளுக்குள் தள்ளினார்கள். நெருக்கடி வரையுமே 10 காவலர்கள்தான் இருந்தார்கள். விஜய் வண்டி வரும் போதுதான் காவல்துறை வந்தது. விஜய் வண்டி போகும் போது காவல்துறை தடியடி நடத்தினார்கள், பின் கூட்டத்தைக் கலைக்கத் தடியடி நடத்தினார்கள்.

“அதிமுக தலைவர் பழனிசாமி வரும் போதும் இதே இடத்தில்தான் கூட்டம் நடந்தது, அப்போது அந்த ஒரு தெருவைத்தான் block செய்தார்கள். ஆனால் விஜய் வரும் போது ரவுண்டானாவிலிருந்தே block ஆகிடுச்சு. கூட்டம் நடந்த இடம் சின்ன இடம். கூட்ட மேலாண்மை இல்லை. வந்தவர்கள் விஜயின் ரசிகர்கள், கட்சி சார்பானவர்கள் இல்லை.”

V. ஏமூர் புதூர்:

**6. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த அம்மா பிரியதர்ஷினி க/பெ சக்திவேல்.**

**7. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த மகள் தரணிகா த/சக்திவேல், சக்திவேல் எங்கள் குழுவிடம் கூறியது:**

“இருவரும் விஜய் இரசிகர்கள். விஜயை நேரில் பார்த்து விடும் ஆர்வத்தில் சென்றனர் ,தற்போது காண வ்முடியாத இடத்துக்கு சென்று விட்டனர்.”

சக்திவேல் டாஸ்மாக் மதுபானக் கடை சூப்பர்வைசர் பணி செய்கிறார். "ஒரு வேளை என்னோட வேலையோட பாவம்தான் அவர்களைக் கொன்றுவிட்டதோ" என்ற குற்றவுணர்ச்சியுடன் உள்ளார்.

### 8. கட்டுக்கடங்காத கூட்ட நெரிசலில் உயிரிழந்த சந்திரா க/பெ செல்வராஜ்

சந்திரா ஒரு விஜய் இரசிகர்:

“இரவு குழுவாகத் திருச்செந்தூர் செல்ல ஏற்பாடுகள் செய்த நிலையில், விஜய் இரசிகராக, விஜய் கரூருக்கே வந்திருக்கும் போது சென்று பார்க்காமல் எப்படி இருப்பது? என்று கருதி அருகில் வசிக்கும் அருக்காணியம்மாளையும் இணைத்துக் கொண்டு பகுதி மக்களுடன் வண்டியில் சென்று விட்டார். “

### 9. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த அருக்காணி க/பெ காளியப்பன்

அருக்காணி அம்மாளின் கணவர் ஓய்வுபெற்ற காவலர்:
“விஜய்யைக் காணக் குழுவாக புறப்பட்டு வண்டியின் வருகைக்காக காத்திருந்த போது கணவர் கூட்டமாக இருக்கும், செல்ல வேண்டாம் என்று கடிந்து வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். வண்டி வந்த போது கணவரிடம் சொல்லாமல் சென்றுள்ளார்.”

“உள்ளூர் புதூரில் குழுவாக ஒருங்கிணைந்து வண்டி ஏற்பாடு செய்து சென்றுள்ளனர்.”

### 10. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த பிரித்திக் சிறுவன் கிருத்திக் யாதவ் தா/பெ சர்மிளா, த/பெ சரவணன் ஏமூர் புதூர்:

“தன் மகன் இரண்டு வயதாக இருக்கும் பொழுது பிரிந்து கணவன் பிரிந்து சென்றுவிட்டார். 8 ஆண்டுகளாக ஒற்றைப் பெற்றோராக மகனே உலகம் என்று நினைத்து வாழ்ந்து வரும் தாய் தான் ஷர்மிளா. தற்போது 10 வயது மகனை இழந்த மாபெரும் துயரத்தில் இருந்து மீளாத சூழலில் குழந்தையும் மனைவியும் கைவிட்டுச் சென்ற பன்னீர்செல்வம் தற்போது உச்ச நீதிமன்றத்தில் சிபிஐ விசாரணை வேண்டுமென்று வழக்குத் தொடர்ந்தது குறித்துத் தனக்கு எதுவும் தெரிவிக்கவில்லை என்றும், காவல்துறை சொன்ன பிறகுதான் செய்தி தெரிய வந்ததாகவும் கூறினார். பிள்ளை யாரென்றே அறியாத அப்பா பணத்திற்கு ஆசைப்பட்டு வழக்குத் தொடுத்திருப்பது கூடுதல் வேதனையாக உள்ளதாகவும் சர்மிளா கூறினார்.

“ஒரு பொண்ணும், ஒரு ஆணும்தான் விஜய் ரசிகர்களை ஒரு வேன் வைத்து இந்தக் கிராமத்திலிருந்து அழைத்துச் சென்றார்கள். விஜய் வந்த போதுதான் நெருக்கடி, இறந்தவர்கள் ஒரு அம்மா மற்றும் அவரது மகள். அம்மாதான் தவெக ரசிகர். ஒரு பையன் இறந்து விட்டான். இவனுடைய அம்மாதான் வளர்த்துள்ளார். பையனுக்கு 9 வயது. 8 வருடமாக இவர்களைப் பிரிந்துள்ள அப்பா, இப்போது தவெக தூண்டுதலின் பேரில் ஒரு வழக்குப் போட்டுள்ளார். பையனுக்கு அப்பா யார் என்ற விவரம் தெரியாது. அப்படி இருக்கும் போது அவருக்கு எந்த விவரமும் தெரியாது. பாசம் கிடையாது. சிபிஐ விசாரணைக்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருக்கார்.”

“இவர்களுடன் திருச்செந்தூர் போகக் கிளம்பிய ஒரு பெண்மணி பேருந்து நிலையம் போகவில்லை. இறந்து விட்டார்.”

ஏமூர் புதூரில் குழுவாக ஒருங்கிணைந்து வண்டி ஏற்பாடு செய்து சென்றுள்ளனர். இப்பகுதியில் 5 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது வரை உடல், மன பாதிப்பிலிருந்து மீள முடியாமல் உள்ளனர். ஒட்டுமொத்தப் பகுதியே துயரத்தில் இன்று மீளவில்லை.

VI. **கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த விஸ்வநாதபுரி ஒரே குடும்பத்தில் 3 பேர்:**

**11. அம்மா :ஹேமலதா**

**12. மகள்: சாய் லக்ஷனா**

**13. மகள்: சாய் ஜீவா, தந்தை ஆனந்தஜோதி கண்ணீருடன் பகிர்ந்தது:**

"விஜய் 3 மணிக்கு வருவதாகச் சொன்னதன் அடிப்படையில் அருகில் இருந்து பார்க்க வேண்டும் என்பதற்காக பன்னிரண்டு மணிக்குக் குடும்பத்துடன் சென்றோம். விஜய் வண்டி வருவதற்கு முன் ராஜ்மோகன் விஜயின் வருகையை அறிவித்தபடி சென்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மிகப் பெரிய நெரிசல் ஏற்பட்டது. விஜய்யைப் பார்க்கவில்லை, விஜய் பஸ்சைக் கூட பார்க்கவில்லை. தெருக்களுக்குள் சுற்றிச் சிக்கிக் கொண்டோம். வண்டி வருவதற்கு முன் குழந்தைகள் இருவரும் அங்கு வந்திருந்த பிற குழந்தைகளுடன் நடைபாதை வண்டியில் விளையாடிக் கொண்டிருந்தனர். மனைவி, பிள்ளைகள் இருவரும் விஜய் இரசிகர்கள்."

VII. **14. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த ஆகாஷ் த/பெ மாணிக்கம், காமராஜர்புரம் வடக்கு,**
**15. தன் காதலியுடன் சென்றுள்ளார்.**

“இருவரும் பலியாகி விட்டனர். இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நிச்சயிக்கப்பட்ட சூழலில் ஏற்பட்ட இழப்பு குடும்பத்தை நிலையச் செய்துள்ளது. விஜய் வருகைக்காகக் காத்திருந்த போது இருவரும் இணைந்து எடுத்து பதிவிட்ட "செல்ஃபி படம்" சமூக ஊடகங்களில் பார்த்தவர்கள் அனைவரும் மன வேதனையைப் பதிவு செய்துள்ளனர்.

VIII. **16. கட்டுக்கடங்காதக் கூட்ட நெரிசலில் உயிரிழந்த ஜெயா க/பெ சுப்பிரமணி 55:**

“எஞ்சினியரிங் முடித்து work from home பணிபுரியும் மகள், விடுமுறைக்கு வந்திருந்த தங்கை மகள் இருவருடனும் விஜயை பார்க்கும் ஆவலுடன் சென்றவர் பலியாகி விட்டார்.”

“உடன் சென்ற இரு இளம் பெண்களும் நெரிசலில் சிக்கிக் கீழே விழுந்த பெண் ஒருவரைக் கைதூக்கி விட்டுத் திரும்பிப் பார்த்த போது அம்மா அருகில் இல்லாதது தெரிய வந்துள்ளது. அம்மாவைத் தேடியுள்ளனர். இடையில் இருவருமே நெரிசலுக்குள் சிக்கி ஒருவரை ஒருவர் பார்க்க முடியாமல் இருந்துள்ளனர்.”

“பின்னர் கஷ்டப்பட்டு ஒருங்கிணைந்து அம்மாவை இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகத் தேடியும் கிடைக்காத காரணத்தால் அப்பா சித்தி அனைவருடன் இணைந்து மருத்துவமனையில் தேடிப் பார்த்த போது உயிரற்று சடலமாக இருந்துள்ளார்.”

**பொதுவானவர்களின் கருத்து:**

**I. தொழிற்சங்கப் பிரதிநிதிகள்:**

நேரில் சென்ற ஒருவர் ரவுண்டானா பாலத்தின் மேலிருந்து பார்த்து விட்டு வந்து விட்டதாகக் கூறினார். ”5 மணிக்கே பெரிய கூட்டம். 5 பேர் ஆண்கள் சென்றோம். விஜய்யைப் பார்க்கச் சென்றோம். அவர் வர இரவு ஆகி விட்டது. பிரிட்ஜ் தாண்டிப் போகவே 1 மணி நேரம் ஆகிடுச்சு. 7 மணி ஆகிடுச்சு அவர் போக. கரண்ட் கட் ஆகிடுச்சு. கொஞ்ச நேரத்துல, அவர் பேசி 5 நிமிசத்துக்குள்ளேயே ஒரே அலறல் சத்தம். பாலத்துக்கு மேல் இருந்தவர்களுக்கு ஒண்ணும் பிரச்சனையில்லை. மதுரை சேலம் பைபாஸ்ல அவர்கள் இருந்தார்கள். தடியடி நடந்திருப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்கள்.

”கூட்டம் நடத்த அந்த இடம் பொருத்தமானது இல்லை. பெண்கள், பிள்ளைகள் வந்திருக்கக் கூடாது. பைபாஸ்-ல இருந்து பார்க்கவே நிறைய கூட்டம். எங்க ஊர்ல நிறைய பேர் போனாங்க. ஒரு பெண் உள்ள மாட்டி, மருத்துவமனைலேருந்து நேற்றுதான் டிஸ்சார்ஜ் ஆனாங்க.

”அப்பா அம்மா உடன் போனவர்கள், அதுவும் அம்மாவுடன் போனவர்கள்தான் நிறைய பேர் இறந்து இருக்கிறார்கள். அரசு பாதுகாப்பு கொடுத்திருக்கணும்.

”நான் தொழிற்சங்கம் முடிவு செய்யும் கட்சிக்குத்தான் வோட்டுப் போடுவேன். ரசிகர் மனநிலையில்தான் வேடிக்கை பார்க்கச் சென்றேன்.

”விஜய் மிகவும் தாமதமாக வந்தது முதல் முக்கியக் காரணம். பரப்புரைக் கூட்டத்திற்கு வந்தவர்கள் அரசியலுக்காகவோ, கொள்கக்காகவோ யாரும் வரவில்லை. விஜயின்

கட்சியில் கொள்கைத் தெளிவு இல்லை. தவெக ரசிகர் மன்றத்தினரைத் தொண்டர்களாகக் கருதும் கட்சி. கட்டமைப்பு இல்லை, கட்டுப்பாடு இல்லை, நடிகரைப் பார்க்க வந்த கூட்டமே தவிர அரசியல் தெளிவுமிக்க கூட்டமில்லை."

<u>வழக்கறிஞர்கள்:</u>

தவெக தலைவர் விஜய் பெரும் கூட்டத்தை காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நமக்கல்லிலிருந்து கிளம்பும் போதே "கரூரைக் கலங்கடிப்போம் வாருங்கள்" என அழைப்பு விடுத்திருக்கிறார்.

நெரிசல் சாவுக்குப் பாதுகாப்புக் குறைபாடு ஒரு காரணம். விஜய் கட்சியினருக்கு அரசியல் அனுபவம் இல்லை என்பது மற்றொரு காரணம். 3 மணி முதல் 10 மணி வரை பரப்புரைக்கான நேரத்திற்கு அனுமதி வாங்கி விட்டு, 12.30 மணிக்கு வருவதாக முதலில் அறிவிக்கப்படுகிறது. இதை நம்பி வெளியூரில் இருந்து வரும் மக்கள், தொலைவிலிருந்து வரும் மக்கள் காலை 7 மணி 8 மணிக்கெல்லாம் வந்து காத்திருந்திருக்கிறார்கள். பின்னர் தவெக அதிகாரபூர்வ டிவிட்டரில் விஜய் 2 மணிக்கு வந்து விடுவார் என அறிவித்தது கூட்டத்தை அதிகரிக்கும் வியூக நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

நாமக்கல் பரப்புரை முடித்துப் பின்தொடர்ந்து வந்தவர்கள் இரசிகர்களா? பணம் பெற்று வந்தவர்களா? என்ற ஐயம் உள்ளது. இவர்களைத் தொடர்ந்து விஜய் போகும் இடங்களில் காண முடிகிறது.

விஜய் அவர்கள் திமுக முப்பெரும் விழாவில் கண்ட கூட்டத்தை விட பெருங்கூட்டம் காட்டி விட வேண்டும் என்று, திட்டமிட்டுத் தாமதமாக வந்தது, நாமக்கலில் இருந்து கரூருக்கு மணிக்கணக்கில் பயணம் செய்து, கூட்டத்தைக் காத்திருக்கச் செய்துள்ளார். கூட்ட நெருக்கடி விளைவுகளுக்கு விஜய்தான் முதன்மைக் காரணம்.

**காவல் அதிகாரிகளின் விளக்கம்:**

"தவெக கூட்டம் டிசம்பர் மாதம் நடத்த மூன்று மாதம் முன் அனுமதி கேட்டு முதலில் கடிதம் கொடுத்தார்கள், மூன்று மாததிற்கு முன், இவ்வளவு முன்கூட்டியே அனுமதி அளிக்க முடியாது எனக் கூறினோம். அடுத்து உழவர் சந்தை, லைட் ஹவுஸ், மனோகரா கார்னர், வேலுநாச்சியார் புரம் உள்ளிட்ட ஐந்து இடங்களில் ஒரே நாளில் அடுத்தடுத்து நடத்த அனுமதி கேட்கப்பட்டது. மேற்கூறிய இடங்களில் ஒரே நாளில் நடத்த அனுமதி அளிக்க முடியாது எனத் தெரிவித்தோம். அவர்கள் கேட்கும் வடிவம் பொதுக் கூட்டம் என்றும் சொல்ல முடியாது, Road show என்றும் சொல்ல முடியாது, ஏனென்றால், அவர்கள் கொண்டுவரும் வண்டியில் விஜய் அவர்கள் உயரமாக நின்று கொண்டு பேசுவார். இறுதியில் அவர்கள் முதலில் கொடுத்த கடிதத்தில் 4ஆவதாக உள்ள இடம்தான் இப்போது பரப்புரை நடந்தது. அதைக் கேட்டு இரண்டு நாள் முன் கடிதம் கொடுத்து அனுமதி கேட்டார்கள். நாங்கள் அவர்கள் கேட்கும் இடத்திலிருந்துதான் கொடுப்பதா இல்லையா என முடிவெடுக்க முடியுமே தவிர, நாங்களாக ஒரு இடத்தைப் பரிந்துரைக்க மாட்டோம். Notified places ஆக இருந்தாலும் இந்தக் கூட்டத்திற்கு எந்த இடம் பொருந்தும் என்று ஆய்வு செய்துதான் அனுமதியளித்தோம். ரவுண்டானாவில் 68,500 பேர் நிற்க முடியும் என ஒரு தனியார் பில்டர் சர்வேயரைக் கொண்டு அளந்து அதை அனுமதிக் கடிதத்துடன் இணைத்துக் கொடுத்தார்கள். திடீரென 24.09.2025 அன்றே 27/09/2025 க்கு கூட்டம் நடத்த அனுமதி கேட்டார்கள்.

"இந்த இடம் 20,000 பேர் நிற்கத் தகுந்த இடம் எனக் கருதித்தான் அனுமதி அளிக்கப்பட்டது. அவர்கள் 10,000 பேர் வருவதாக அனுமானித்தார்கள், ஆனால் நாங்கள் 20,000 என அனுமானித்தோம். மேலும் கரூரில் வாகன நிறுத்தம் உள்ள ஒரே இடம் இதுதான். அதனால்தான் அனுமதித்தோம்.

"இவ்வளவு வாகனம் நிறுத்தும் இடம் இருந்தும் ஒவ்வொரு தெருவிலும் ஆயிரக்கணக்கான வண்டிகள் நின்றது உண்மைதான். ஆனால் மாலை 4 அல்லது 5 மணிக்கு மேல் கூட்டம் கட்டுப்பாட்டை இழந்த பிறகுதான் இந்த வாகனங்கள் நிறுத்தப்பட்டன."

"ரவுண்டானாவில் இருந்து வலது பக்க சாலையில் விஜய் வண்டி செல்லத் தொடங்கியது, அவர்கள் கரூர் ஈரோடு சாலை பிரியும் சாலையில் இடது புறம் வந்து U turn போட்டுப் பேசும் spotக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் விஜய் வண்டி வலது சாலையில் சென்றது, அந்த இடத்தில் நின்றிருந்த மக்கள் பின்னோக்கி நகர வேண்டியதாயிற்று, அதற்கு மேல் மேற்கிலிருந்து மக்கள் விஜயைப் பார்க்க முன்னோக்கி நகரத் தொடங்கினர், முன் நின்றிருந்த மக்கள் மூச்சுக் கூட விட முடியாமல் கூட்டத்திலிருந்து வெளியேற முயல, எதற்கும் வழியின்றி சிக்குண்டார்கள்."

"போலீஸ் 5 அடுக்குப் பாதுகாப்பு கொடுத்தது, 82 கிமீ எங்கள் பாதுகாப்பு கரூர் எல்லை தொடங்கி கரூர் எல்லை முடியும் வரையிலான பாதுகாப்புக் கொடுத்தோம். அதாவது வரும் போது 20 கிமீ, போகும் போது 62 கிமீ என 5 அடுக்குப் பாதுகாப்புக் கொடுத்தோம்." இந்த நெருக்கடிக்குக் காரணமே தவெக வின் disorientation தான்.

<u>அரசுக்குக் குழுவின் பரிந்துரைகள்:</u>

- ❖ ஒரு வீட்டில் பல உயிரிழப்புகள், காயமுற்றவர்கள் உள்ள உணர்ச்சிவயப்பட்ட நிலையில், பலத்த காயமடைந்தவர்கள் உயிரிழந்த உறவுகளை சந்திக்க, மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்துள்ளனர். மீண்டும் மருத்துவமனை செல்ல முடியாமல் இன்று வரை காயங்களுடன் சரியான மருத்துவ சிகிச்சை இல்லாமல் தவித்து வருகிறார்கள். உடனடியாக அவர்களுக்குத் தகுந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள் மூலம் ஆலோசனைகள் அளிக்கப்பட வேண்டும்.

- ❖ பாதிப்புக்குள்ளான குடும்பங்களில் (உயிர் இழந்தவர்கள், காயம் அடைந்தவர்கள்), ஒருவருக்கு தகுதிக்கு ஏற்ற அரசு வேலை வழங்கப்பட வேண்டும்.

- ❖ இதுபோன்ற ரோடுஷோ அல்லது பொதுக் கூட்டங்களுக்கு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். ஆனால் நெறிமுறைகள் என்ற பெயரில் அடிப்படை உரிமைகளான கூட்டம் கூட்டும் உரிமை, பரப்புரை செய்யும் உரிமை, பேச்சுரிமை

உள்ளிட்ட கருத்துரிமைகளைக் காவல்துறை வசமோ, நீதித்துறை வசமோ ஒப்படைத்து விடக் கூடாது.

- ❖ சார்பற்ற, முறையான, விரைவான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். நடந்த கொடுமைகளுக்கான குற்றப் பொறுப்பு தீர்மானிக்கப்பட்டு, காலத் தாழ்வின்றிக் குற்றவாளிகள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ❖ ரசிகர் மனப்பான்மை விடுத்து பகுத்தறிவு மனப்பான்மையை ஊக்குவிக்கும் விதத்தில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். மாணவர் சங்கத் தேர்தல்கள் தொடக்க பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை அனைத்துக் கல்விநிலையங்களிலும் உடனடியாக நடத்தப்பட வேண்டும் (இதே பரிந்துரையை நீதியரசர் சந்துரு தன் one man committee அறிக்கையிலும் வலியுறுத்தி உள்ளார்).

<u>குழு விவரம்:</u>

| | | |
|---|---|---|
| குழுத் தலைவர் | : | பேராசிரியர் சரசுவதி |
| குழு ஒருங்கிணைப்பாளர் | : | திருமிகு கிறிஸ்டினா சாமி |
| குழு உறுப்பினர்கள் | : | திருமிகு ஜாக்லின் |
| | : | திருமிகு F. மேரி லில்லிபாய் |
| | : | தோழர் செல்வி |
| | : | பத்திரிகையாளர் கிருஷ்ணவேணி |
| | : | வழக்கறிஞர் சுதா காந்தி |
| | : | திருமிகு ராதிகா |
| | : | திருமிகு பாக்கியம் |
| | : | திருமிகு மஞ்சுளா |
| | : | திருமிகு ஜானகி |
| | : | திருமிகு கலைவாணி |
| | : | திருமிகு ஹசீன் ஷர்மிளா |

---